விலை 0-1-3 அணா   UDUMALAI BEERANGI   டெலிபோன்

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

வாரப்பதிப்பு

வெடி. 1]   சென்னை, சனிக்கிழமை (16-4-1949)   [குண்டு 26

பக்த சிரோன்மணிகளே பகருங்கள்!

(எஸ். என். விவேகன். கரூர்)

பக்த சிரோன்மணிகளே! காவியமுணர்ந்த கம்ப தாசர்களே! சனாதனத் திற்குச்சல்லடம் கட்டும் சழக்கர்களே அண்டிப்பிழைக்க வந்த ஆரியர்களின் அடிவருடும்அன்பர்களே! கீழேமூன்று கேள்விகள் கொடுத்திருக்கிறேன். அதற்குச் சரியான பதில் எழுதுங்கள் பார்ப்போம்.

ஆம். இதோ எமது முதல் கேள்வி

திருவள்ளுவர் கடைச்சங்க காலத்தவர் என்றும் திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்டதென்றும், திருவள்ளுவர் தாமியற்றிய திருக்குறளை மதுரையிலுள்ள தமிழ் சங்கத்தில் அறங்கேற்ற எடுத்துக் கொண்டு இடைக்கழிநாட்டின் வழி செல்ல, இடையில் இடைகாடரும், ஔவையும் எதிர்பட அவர்களையும் அழைத்துக்கொண்டு மதுரை தமிழ் சங்கத்தை அடைந்து அங்கு நக்கீரர் முதலிய சங்கப் புலவர்கள் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் செந்தமிழ் பாவால் தக்கவிடையிறுத்துஅவர்களை வென்று தாமியற்றிய நூலாகிய திருக்குறளை அறங்கேற்ற, இதை கேள்வியுற்ற மதுரை மன்னன் உக்கிரப்பெருவழுதியும் சங்கப்புலவர்கள் நாற்பத் தொன்பதின்மரும் திருவள்ளுவரையும் திருக்குறளையும் புகழ்ந்து நாற்பத் தொன்பது வெண்பாக்களைப் பாடி அதற்குத் திருவள்ளுவர்மாலை என்றும் கூறப்படுகிறது. வள்ளுவர் ஆண்டு இன்றைக்கு (1980) வள்ளுவரும் ஔவையும் சகோதர சகோதரிகள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே ஔவையார் பிறந்தது திருவள்ளுவர் காலத்தில்.

இரண்டாவது குலோத்துங்கன் கி. பி. 1132 முதல் 1162 வரைக்கும் பின் அவனது மகனான இராசராசன் கி.பி. 1200 வரையிலும் ஆட்சிபுரிந்ததாகத் தெரியவருகிறது. கம்பர் குலோத்துங்கன் காலத்திருந்த கவி. ஆகவே கம்பர் காலம் பனிரண்டாம் நூற்றாண்டு. வள்ளுவர் காலத்திற்குப் பின் 1200 வருடங்களுக்குப்பிற் பட்டது கம்பர் காலம் என்று தெரியவருகிறது. பிரிதோரிடத்தில்,

“எண்ணியசகாத்த மெண்ணூற்றேழின்
மேல்சடையன் வாழ்வு
கண்ணிய வெண்ணைநல்லூர்
தனிலே கம்பநாடன்
பண்ணிய விராமகாதை பங்குனி
புத்திரத்திற்
கண்ணியவரங்கர்முன்னே கவியறங்
கேற்றினனே”

என்று கூறப்பட்டிருக்கிறது. இதன்படி பார்த்தால் கம்பர்காலம் எண்பதாம் நூற்றாண்டு என்று தெரியவருகிறது. வள்ளுவர் காலத்திற்குப்பின் 900 ஆண்டுகளுக்குப் பிற்பட்டது கம்பர் காலம் என்று தெரியவருகிறது. ஆகவே கம்பர் காலம் எண்பதாம் நூற்றாண்டா? அல்லது பனிரண்டாம் நூற்றாண்டா?

வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் திருக்குறளை இயற்றியிருக்கிறார். கம்பர் எண்பதாம் நூற்றாண்டிலோ அல்லது பனிரண்டாம் நூற்றாண்டிலோ இராமாயண காதையை இயற்றி இருக்கிறார். கம்பர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டானால் வள்ளுவர் காலத்திற்குப் பின் 900 ஆண்டுகட்கு பிற்பட்டது கம்பர் காலம் அப்படிக்கின்றி பனிரண்டாம் நூற்றாண்டானால் வள்ளுவர் காலத்திற்குப் பின் 1200 ஆண்டுகட்கு பிற்பட்டது கம்பர் காலம். வள்ளுவர் காலத்திலிருந்த ஔவையார் வள்ளுவரின் சகோதரியான ஔவையார் ஒன்பதாம் நூற்றாண்டிலோ அல்லது பனிரண்டாம் நூற்றாண்டிலோயிருந்த கம்பர் காலத்திலும் இருந்ததாக கூறப்படுகிறதே! கம்பர் காலத்தில் ஒன்பதாம் நூற்றாண்டானால் ஔவையார் 900 ஆண்டுகள் உயிர்வாழ்ந்திருக்கவேண்டும். பனிரண்டாம் நூற்றாண்டு கம்பர் காலமானால் ஔவையார் 1200 வருடங்கள் உயிர் வாழ்ந்திருக்க வேண்டும். அப்படி ஔவையார் உயிர் வாழ்ந்திருக்க முடியுமா? அல்லது வள்ளுவரின் சகோதரியாகிய ஔவையார் வேறு கம்பர்காலத்திலிருந்த ஔவையார் வேறா? கம்பர் காலத்திலும் ஔவையார் இருந்ததற்கு ஒருசான்று கூறுகிறேன். ஒருநாள் கம்பரும் ஔவையாரும் ஒரு கிராமத்தை நோக்கி வயல் வழியாக செல்லும் போது அங்கு அரைஎன்ற பெயருள்ள செடியிருந்ததாம் அதை பார்த்தகம்பர் ஔவையாரை கேவலப்படுத்த எண்ணி (ஒருகால் நாலிலைப்பந்தலடி) இதன் பொருள் என்ன? என்று கேட்க, ஔவையார் தன்னைக் கம்பர் அடி என்று இழித்துக்கூறியதற்கு தக்க மரியாதைக்கொடுக்க எண்ணி

“எட்டேகால் லட்சணமே
எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே
முட்டமேல் கூரையில்லா வீடே
குலராமன் தூதவனே
ஆரையடா சொன்னாயது”

என்று சரியானமரியாதையுடன் கம்பருக்கு பதில் கொடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது. இதுவே கம்பர் காலத்தில் ஔவையார் இருந்ததற்குச் சான்றாகும். ஆகவே இக்கேள்விக்கு சரியான பதில் எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக இதோ நமதுஇரண்டாவது கேள்வி

விஸ்வாமித்திரர் என்பவர் முன் ஓர் நாட்டின் அரசராயிருந்து காட்டிற்கு வேடடைக்கு சென்று வேட்டையாடி களைப்புற்று தாகவிடாய் தீர த்ண்ணீர் இருக்குமிட மறிந்து வரும்படி தன் அமைச்சனிடம் கூற, அமைச்சன கானக முழுதும் தேடியும் தண்ணீர் அகப்படாமல் கடைசியில் வசிஸ்டர் ஆசிரமத்தை அடைந்து அவரிடம் தங்களின் களை தீர வழி செய்யுமாறு வேண்ட உடனே வசிஸ்டர் தேவலோகத்திலுள்ள காமதேனுவை வரவழைத்து அரசன் முதல் யாவருக்கும் விருந்தளித்ததாகவும் பின் அவ்வரசன் கானகத்திலுள்ள இம்முனிவனிடம் இப்படியிருப்பதாலல்லவோ இவ்வளவு பெரிய நம் பரிவாரங்களுக்கு விருந்தளித்தான். ஆகவே இப்பசுவை நாம் கொண்டுபோகவேண்டுமென்று அதை

(தொடர்ச்சி 8-ம்பக்கம் பார்க்க)

கண் திறக்குமா.........?



படத்துறையில் பார்ப்பனீயம்

படக் கொட்டகைகள் இன்று அநேகமாகப் பார்ப்பனீயமதசலாச் சாரவளர்ப்பிடசங்கங்களாய்த்திகழ் கின்றன. கொட்டகைகள் கட்டுவது நம்மவர். முதல் போடுவது நம்ம வர். படமெடுப்பது நம்மவர். பணம் கொடுத்து பார்ப்பவர்கள் பெரிதும் நம்மவர்கள். நடிக நடி கையர்கள் பெரிதும் நம்மவர்களே! ஆனல் வளர்வதோ பார்ப்பனீயம்!

படக்கதைகளில் அநேகம் நம் இனத்தை இழிவு படுத்துவனவா யும் விபீடனீபத்தைவளர்ப்பனவா யும், மூடபக்தியைப்பெருக்குவன வாயும், சூத்திரத்தன்மையை நிலைநிறுத்துவனவாயும், மக்களை மாக்களாக்கிக் காட்டுமிராண்டிக் காலத்திற்கு அழைத்துச்செல்வன வாயும் அமைந்திருக்கும். எடுத்துக் காட்டாக 'பக்த அனுமான்' 'நந்த னர்' 'பிரகலாதன்' போன்ற படங் களைக் கூறலாம்.

லிங்கத்திற்கு பாலூற்றிக் கழுவு வது, கல்லை பக்தியுடன்தொழுவது, பாடுவது, ஆடுவது, மலர் மாலை சூட்டுவது, நாமம் போடுவது, விபூதி தீட்டுவது போன்ற பலமூட காரியங்களில் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கை குறையா திருக்கவும் பகுத்தறிவுக் கருத்துகள் நாட்டில் பரவாமல் நசுக்கவுமாக முயற்சிகள் செய்யப்பட்டிருப்பது இத்தகைய படங்களில் பிரதிபலிப்பதை காண லாம்.

இராஜகுருக்கள், அர்ச்சகர்கள் புரோகிதர்கள் போன்றபார்ப்பனர் களின் வேடம் தரித்து ஆடுவதை எல்லாப் படங்களிலும் காணலாம். ஆனல் அவர்கள் வாழ்க்கையின் நித்திய நிகழ்ச்சிகளான பஞ்சமா பாதகச் செயல்களை மறைத்து அவர்களை பெரியயோகிகள், ஞானி கள், அறிஞர்கள், உலகிற்கு வழி காட்டும் உத்தமர்கள்போல் சித்த ரித்துக் காட்டுவர். அவர்களின் சுரண்டலை ஆதிக்கத்தைக் கண்டு மக்கள் ஆத்திரம் கொள்ளாதிருக்க வும், அவர்களை மக்கள் 'சாமி' என்றழைத்து பக்தி பாராட்டத் தூண்டும, கட்டங்கள் புகுத்தப்பட் டிருப்பதைப்பார்க்கலாம்.

பெரும்பாலான படங்களில் வசனநடை "நேக்கு, நோக்கு, ஆத் துக்கு, நமஸ்காரம், அவாள் வர்ராள்" என்று முழுக்க முழுக்க அக்கிரகார நடையாக இருக்கும் செத்தமொழியை ('தேவ மொழி' என்று நம்பும்படி செய்யப்பட்ட சூழ்ச்சியை மக்கள் அறிந்துகொள் ளாமல் அவர்களின் நம்பிக்கை மங் கிப் போகாமலிருக்கும் பொருட்டு திருமணம், திருவிழாக்கள்போன்ற வற்றைக்கதையில் புகுத்தி, வேதி யர்களைவிட்டு 'மந்திரங்களை' ஓதச் செய்யும் கட்டங்களை அநேக படங் களில் காணலாம்.

இப்படியாக பகுத்தறிவு பிரசாரத் திற்கு எதிராக படத் துறையில் பார்ப்பனீயம் பிரசாரம் செய்தது. இன்று ரேடியோ நிலையங்களின் மூலம் செய்வதைப் போல. கடந்த 20, 30 ஆண்டுகளாக எடுக்கப்பட்ட படங்களில் 90 விகிதம் புராணக் குப்பைகளாகவேஇருக்கும்.யானைத் தலைவர்தோன்ருத படமிருக்காது. நாரதர் ஒவ்வொரு படத்திற்கும் மேல் லோகத்தி"லிருந்து வந்துவிடு வார். எந்தப் பெண் குளித்துக் கொண்டிருப்பாள். எவள் சேலை அவிழும் என்று எண்ணியபடியே கண்ணன் விண்ணுலகைவிட்டுப்பட வுலகத்திற்கு வருவார். இப்படியே பெண் வேட்டையாடிகளான முரு கன், சிவன் முதலானவர்களைப் பார்ப்பனீயம் வரவேற்று நம் மக்க ளுக்கு அவர்களின் "லீலாவினோ தங்களைக்" காட்டும். நம்மவர்களும் "ஆகா கடவுளின் பெருமையே பெருமை!" என்று கொட்டகையி லேயே கன்னத்தில் போட்டுக் கொள்ளுவார்கள்.

நம் நடிகர்களோ பணம் வந்தால் போதும் என எண்ணும் உல்லாச வாழ்வினர். நாமம் தீட்டுவது, விபூதி பூசுவது. கோட்டை கட்டு வது, ஜெபமாலை உருட்டுவது, பல காட்டுமிராண்டிக் கடவுள்களின் வேடங்களில்தோன்றுவதுபோன்ற காரியங்களைச்செய்தலே தம் வாழ் வின் குறிக்கோள் எனஎண்ணுபவர் கள். நாட்டின் நலத்தில், மக்களின் மானவாழ்வில் அவர்கட்கு அணுவ ளவு கவலையுமில்லை. அவர்கள் பாட்டாளியைச்சுரண்டிவாழும் முத லாளியின் நிலையிலிருக்கின்ருர்கள். அந்த அளவுக்கு அவர்களின் சுய நல பார்ப்பன அடிமைத் தன்மை கள் வளர்ந்துள்ளன. ஆனல் சூத்தி ரத்தன்மையை உதைத்துத் தள்ளி தன்மானத்துடன் இனப்பற்றுடன் வாழவிரும்பும் திராவிட நடிகர் ஒருவருமே யில்லையா என்ருல், இருக்கின்ருர், பாலை நிலத்தில் ரோஜா மலர்ந்தது போல் சேற்றில் மாணிக்கம் கிடைத்ததுபோல் ஒரு வர் நகைச்சுவை அரசர் N. S. K. இருக்கின்ருர்

ஆனல் பார்ப்பன நடிக நடிகை யர்கள், பாடகர்கள் 100க்கு 100 இனப் பற்றுடையவர்கள். D. K. பட்டம்மாள் தான் பாடிய "ஆடு வோமே...." என்ற பாட்டில் "பாப் பானை ஐயரென்ற காலமும் போச்சே" என்ற அடியை கோட் ஸே வேலைசெய்திருப்பது ஒன்றே இதற்குப்போதிய எடுத்துக் காட்டா கும். மற்றும் M.S.S. பஜனை பாடிக்கொண்டு மீராவாகமாறி கண் ணனுடன் 'ஐக்கியமாவது'போன்ற அநேக காரியங்கள் அவர்களின் இனமதப் பற்றை காட்டுகின்றன. இன்றைய திரைப் பட உலகில் இவர்களே பலத்த செல்வாக்கும் பத்திரிகை உலகில் மிகுந்த விளம் பரமும் பெற்றுவருகின்றனர். நம் மவர்கள் எவ்வளவு திறமைசாலிக ளாயினும் விளம்பரப் படுத்துவ தில்லை. பத்திரிகையுலகில் பார்ப்ப னர்கள் செல்வாக்கு பெற்றிருப்ப தால் அதுமட்டுமல்ல. ஓரிரு பார்ப் பனப் பத்திரிகைகள் நகைச்சுவை அரசரை திட்டவும் தொடங்கிவிட் டன.

ஆகவே நடிகநடிகைகளும் இசை வாணர்களும் இனப்பற்று கொண்டு சுயநலத்தோடு பொதுநலத்திலும் கவனம் செலுத்தவேண்டும். காலத் துக்கேற்ற கருத்தமைந்தகதையாய் பாட்டாய் இருந்தாலன்றி பகுத்தறி விற்கு ஒத்துவருவனவா யிருந்தா லன்றி நடிக்கவோ; பாடவோமறுத் துவிடவேண்டும். "நல்ல தம்பி" "வேலைக்காரி" போன்ற பகுத்தறி வுப்படங்களில் நடித்தால் மட்டும் போதாது. நடிக்கும் ஒவ்வொருவ ரும் பகுத்தறிவு வாதியாக பொது ஜனத்தொண்டராக மாறவேண்டும். N.S.K. அவர்கள் தலைமையில் ஒரு மாநாடு கூட்டித் தங்கள் எதிர்காலம் பற்றி ஓர் திட்டம் தீட்டி அதன் படி நடக்கப் பிரதிக்கினை செய்து கொள்ள உறுதியுடன் முன் வரு வார்களாக?

இந்தியா பேசுகிறது

(முன் இதழ் தொடர்ச்சி)

படத்தின் சுவ ரொட்டிகளில் கண்ட மற்றொரு வாக்கியம் முழு உண்மை. அது தான் மிருகங்கள் தெய்வங்களாக்கப்பட்டு அவைகளை தொழப்படுகின்றன என்பது அமெரிக்கர்களுக்குத் தெரியாது, இங்கு மிருகங்கள்மட்டுமல்ல அவை களின் கழிவுப் பொருள்களெல்லாம் சாமிகளாகிக் காட்சியளிக்கும் வெட் கக் கேட்டை! அவர்கள் பிள்ளை யாரைப் பார்த்து விட்டு மிருகங்கள் தொழப் படுகின்றன என்றனர். ஒரு பிடி மாட்டுச் சாணம் பிள்ளை யாராகி பூஜை செய்யப் படுவதைக் கண்டால் என்ன நினைப்பார்களோ! பன்றி (வராக அவதாரம்) யானை (பிள்ளையார்) மாடு (கோ பூஜை, நந்தி முதலிய,) இன்னும் கருடன், பாம்பு, மீன் முதலிய மிருகங்கள் மட்டுமல்ல ஓரறிவு ஈரறிவுப் பிர யாணிகள் கூட இங்கு பக்தி சிரத் தையோடு பூஜிக்கப்படுவதையும், மாட்டு மூத்தரத்தைத் தலையில் தெளித்து வாயில் உட்கொண்டு, சிலை கருவி வழும் சாக்கடை நீரை பக்திப் பெருக் கோடு கண்களில் ஒற்றிக் கொள்ளும் கேவலமான தும் ஆபாசமானதுமான நிலையை எடுத்துச்சொன்னல் தவரு? அதற் காக சொல்பவர்கள் மீது பாய்வதா அறிவுடமை! வெட்க மிருந்தால் சொன்னவுடன் தலையைக் குனிந்து கொண்டு அப்பால் போய்ச் சிந் திந்து மூடச் செயல்களையும் கருத் துக்களையும் ஓடச் செய்யும் வழி களை நாட வேண்டாமா? நாடு நலம் பெற வேண்டும் என்ற நன் நோக் கம் இருந்தால்!

மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன் நிகோலாஸ் என்னும் ஆங்கி லேயர் 'இந்தியா பற்றிய தீர்ப்பு' என்னும் நூலொன்றில் தான் இந்த நாட்டில் கண்ட தீண்டாமை, மதக் கொடுமை பெண்கள் நிலை ஆகிய வற்றின் படப் பிடிப்பைப் புத்தக வாயிலாக வெளியிட்ட போதும் இங்குள்ள தேசிய வாதிகள் நோ யைத் தீர்க்க மருந்து காணுது நோயைச் சுட்டிக் காட்டியவன் மீது அம்பு வீசின் அந்தப் புத்திசா

"உடுமலை பீரங்கி"

விளம்பரம் சேகரிக்க திறமை யுள்ள ஏஜெண்டுகள்தேவை. விபரங்கட்கு எழுதவும்.

நிர்வாகி.

உடுமலை பீரங்கி. சென்னை. 3.

(ஸ்தாபிதம் 1931.) டெலிபோன் 2597

B. R. & SONS.

33, திருவேங்கிட முதலித் தெரு,
பெரியமேட்டு, சென்னை 3.

பெரியமேட்டு சப்-ரிஜிஸ்தராபீசுக்கு அடுத்த மேல்புறத்துச் சந்து

- எல்லாவித பத்திரங்களும் எழுதுதல்.
- தமிழிலும் இங்கிலீஷிலும் டைப் அடித்தல்.
- பத்திரங்களைப் பரிசோதித்து பாத்தியா பாத்தியங்களைத் தெரிவித்தல்
- ரிஜிஸ்தரேஷன், ஸ்டாம்பு முதலிய தகவல்களை அளித்தல்.
- சொத்துக்களின்பேரில் அடமானங்கள் ஏற்பாடு செய்தல்.
- சொத்துக்களின் பேரில் கடன்கள் பெறல்,
- கிரயங்கொள்வதற்கும், விற்பனை செய்வதற்கும்.
- ஏலம் போடுதல்

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் திறமைக்கும் உண்மைக்கும் தகுந்த இடம் இதுவே.

லிசள் நிகோலாஸுக்கு அளித்த சாபங்கள் அவர்கள் கூறும் ஏழு ஜன்மம் அவர் எடுப்பதாயிருந்தாலும் அந்த சாபத்திடு அவரை நீங்காது பலிப்பதாயிருந்தால்!

'இங்கியா பேசுகிறது' என்ற காட்சியைக் காண்பிக்கக் கூடாது என்று கதறுவதற்குக் காரணம் இங்குள்ள உண்மை நிலைமை வெளியார் காண முடியாமல் திரைபோட்டிருக்கிருர்களல்லவா அத் திரையைக் கிழித்துக் காட்டி விடும் அந்தப்படம் என்ற அச்சத்தினல்தான் ஆளுக்கு மூன்று ரோல்ஸ் ராய்ஸுகளும், பெரு லட்சத்துக்கு தட்டுமுட்டு சாமான்களும், விருந்து வைபவங்களும் ஆயிரக் கணக்கில் மாதச் சம்பளமும் அனுபவித்துக் கொண்டு அதைப் பார்த்து இந்திய தேசம் அந்தஸ்து மிக்கது என்று எண்ணட்டும் என்று வெளி நாட்டுத் தூதுவர்களை அமர்த்தியுள்ளனர் இந்திய சர்க்கார் உள்ளபடியே அந்த ஆடம்பரத்தினல் அந்தஸ்து வந்ததா, கௌரவம் கனத்ததா, பெருமை பெருகினதா என்ருல் இல்லை என்று நாம் சொல்ல வேண்டுவதில்லை. 'இந்தியா பேசுகிறது' என்ற அந்தப் படம் அமெரிக்கா முதலிய நாடுகள் இந்த நாட்டைப் பற்றி என்ன எண்ணுகிறது என்பதைப் பிரதி பலிக்க வில்லையா?

வேண்டுமானல் ஆர்ப்பாட்டம் செய்தும், மற்றபடி இந்திய தூதரின் வாயிலாக நடவடிக்கை எடுத்தும் அம்மாதிரிப்படங்களைத் தடை செய்து விடலாம். அத்தோடு தீர்ந்ததா நாட்டின் வேலை? நல்ல நிலை வந்து விடுமா? வெளி நாடுகளில் இந்தியத் தூதுவர்களின் தடபுடலையும், தாராளச் செலவையும், அங்கே செய்யப் படுகின்ற பிரசாரத்தையும் கண்டு உள்ளபடியே இந்தியாவைப் பற்றி நன் மதிப்புக் கொண்டு ஒரு அயல் நாட்டான் இந்த நாட்டிற்கு வந்து ஒரு சுற்று சுற்றிப் பார்வை யிட்டானுனல் என்ன காண்பான்? எங்கும் பசி பஞ்சம் பிணி, பட்டினி என்ற கூக்குரல்களையும், தினந்தினம் பெருகி வரும் பிச்சைக் காரர்கள் தொல்லையும், வேலையில்லா மக்களின் அழுகுரலையும், நோயுண்டவர் சதறலையும காண்பாருகில், "இங்குள்ள மக்கள் கதறிக் கண்ணீர் விடுகிருர்கள். நம் நாட்டில் சர்க்கார் சார்பாக வந்தவர்களோ, வெண்ணீரில் நீராடி, வெண்பட்டுடுத்தி பன்னீர் தெளித்துக் கொண்டு நன்னிலையில் இருக்க பவனி வந்து பொன் விளைகிறது எங்கள் நாட்டில் என்று காலட்சேபம் நடத்து கின்றனரே, கர்வத்துடன்" என்றுசொல்லமாட்டார்கள் இங்கு நினைத்துக் கொள்வார்கள். பிறகு அங்கே சென்று தாங்கள் கண்டதை தங்கள் நாட்டவருக்கும் காட்டுவர் ஏடு, படம், சொற் பொழிவு ஆகிய வற்றின் மூலம்.

இங்கு நடக்கும் அக்கிரமங்களையும் கொடுமைகளையும் எடுத்துக் கூறுதற்குப் பரிகாரம் தேடப்பாடுபடும் இயக்கங்களுக்கு வேண்டுமானல் ஆட்சியாளர் வாய்ப் பூட்டு போடலாம். ஆனல் பாட்டாளிகளின் பசிக் கூச்சலும், கணவனையிழந்த காரிகையின் ஏக்கப்பார்வையும், இயற்கை யுணர்ச்சியைக் கட்டுப் படுத்த முடியாத அளவிலே வேருெருவனுடன் கூடித் தன் வேட்கையைத்தணித்துக்கொண்டபின் அதன் விளைவாக வந்த கருவினைக் கண்டு சமுதாயப் பழிப்புக் கஞ்சி வருந்து வதும், பின்பு அக்கரு உருவாகி உலகத்தில் உதித்தவுடன் கழுத்து நெரிக்கப்பட்டு உயிர் விடும்போது அதன் வாயிலிருந்து வெளிவரும் இச் சொல்லும் கட்டுத் திட்டங்களுக்கு உட்பட்டும், கணவனுலும் அவனைச் சேர்ந்தோர்களாலும் நஷ்டப் படுத்தப் படும். பெண்களின் கண்ணீரும் மௌனமாகவே பேசும். ஆனல் வெளி நாட்டார் காதுகளில் அவைகள் ஒலிக்காது. ஆயினும் அவர்களது உள்ளம் உணர்ந்து கொள்ளும். அதன்விளைவுதான் "இந்தியா பேசுகிறது" அதைக் கண்ட இங்குள்ள சில குறு மதியினர் ஏசுகிறதினுலும், வசைமாரி வீசுவதினுலும் இந்தியாவின் மாசு நீங்கி விடாது, பதிலாக சமுதாயக் கொடுமை என்றும் குற்றவாளி தனக்கு வக்கீல்கள் அகப்பட்டு விட்டதைக் கண்டு, மேலும் குற்றங்கள் அநீதிகள் புரிவதற்குத் தூண்டுகோலாகத் தான் அமையும்.

ஆகவே உள்ளதைச் சொல்பவர்கள் மீது உடம்பெரிச்சல் கொள்ளாது, ஊருக்கு, உழைக்கவேண்டுமென்ற உயர்ந்த எண்ணங் கொண்ட ஏடுகள், தங்கள்போக்கை மாற்றி பாசி பிடித்த சமுதாயத்தைத்திருத்தி அமைக்கப்பாடுபடக் கேட்டுக் கொள்கிறோம். இந்த நாட்டின் கௌரவம் உள்ளபடியே காக்கப்பட வேண்டுமானல், உலுத்தர்கள் எப்படியோ நடந்து கொள்ளட்டும். ஏனெனில் அவர்கள் வாழ்வு ஏனையோரின் தாழ்வில் தான் நடக்கவேண்டும் என்ற அவசிய மிருப்பதால், காலம் அவர்களை அலங்கோல மாக்கும் என்ப தென்னவோ உறுதி.

வேறென்ன வேண்டும்!

(பொள்ளாச்சி டி. எஸ். லிங்கப்பா.)

திராவிடர்க்கோர் வல்லரசு தனியரசு வேண்டும்
தனிநாட்டில் அதுதமிழில் நடைபெறுதல்
[வேண்டும்.

மறுவுலகம் கற்கடவுள் மதபேதம் காட்டி
வஞ்சனைகள் செய்வோரை மாய்த்திடுதல் வேண்டும்

அறிவுவளர் காலத்தில் புராணங்கள் பேசும்
அறைநாவு படைத்தவரை அழித்திடுதல் வேண்டும்

விபசார மடமான கோவில்களை மாற்றி
விஞ்ஞானச் சாலைகளாய் அமைத்திடுதல் வேண்டும்

சிலையருகில் முணுமுணுக்கும் சிறுநேரம் தன்னைச்
சிந்தனையில் செலவிட்டு ஆராய்தல் வேண்டும்.

ஆரியனின் தரகினிலே ஆட்கொள்ளு கின்ற
ஆண்டவனை அடியோடு பெயர்த்திடுதல் வேண்டும்.

பெருமைதிகழ் தென்நாட்டில் பெரியாரை என்றும்
பெருந்தலைவராய்க் கொண்டு மகிழ்ந்திடுதல்
[வேண்டும்.

இவையன்றி திராவிடர்க்கு வேறென்ன வேண்டும்!
என்றென்றும் தன்மானம் இருந்திடுதல்வேண்டும்!!

பகவான் செயல்

E. V. N. V. சாமி

நமஸ்காரம் சாமி, எங்கே இப்படி அவசரமா?

யார்ரா இவ, அபசகுனம்பிடிச்ச கிரகாச்சாரமா இருக்கா?

மன்னிக்கணும் ஸ்வாமி!

அதுக்குள்ளே கோவிந்தசாமி! நம்பபக்கத்தூரு முனுசாமி பிள்ளை மகள் பாக்கியம் இருக்காளோ இல்லியோ அவா புஷ்பவதிஆயிருக்கா இன்னிக்கு வீட்டுக்கழைக்கிறது. புண்யாச்சனைக்காக இப்படி அவசரமா....

முனுசாமி மக பாக்கியம் புஷ்பவதி ஆயிடுச்சா ஸ்வாமி!

ஏ, நோக்குத் தெரியாதா?

இப்பத்தான் ஸ்வாமி ஊர்லேயிருந்து வர்ரேன் அப்ப உங்க தயவுவேணும் ஸ்வாமி,

அது எப்பவேணும்னுலும் கிடையக்கிடைக்கும் கோவிந்தசாமி!

என்ன விசேஷம்! சும்மா சொல்லு.

இல்லிங்க நம்ப ராமலிங்கத்துக்கு ......

பாக்யத்தை முடிச்சுவைக்கணும் அவ்வளவுதானே?

அவ்வளவு கருணையிருந்தா போதும்சாமி!

அப்பன முனுசாமியை கலந்து ..

கல்யாணசெலவு பூராவுக்கு உங்ககிட்டயே பணத்தை குடுத்தர்ரே சாமி! நீங்க கல்யாணத்தை முடிச்சுவெச்சா போதும் சாமி!

அதுக்கென்ன கோவிந்தசாமி உங்க கல்யாணத்தை முடிச்சுட்டு நான் வேறு வேலை பார்க்கறேன். போதுமா?

கோட்டாரிக்கனபாடிகள் முனுசாமியிடத்தில் கோவிந்தசாமியைப் பற்றி புகழ்ந்துபேசுவதும், ராமலிங்கத்திடம் பாக்யத்தைப் பற்றி வர்ணிப்பதுமாகப் பேசி கடைசியில் ராமலிங்கத்திற்கும் பாக்யத்திற்கும் சாஸ்திரோத்தமாக திருமணத்தை முடித்துவைத்தார்

கனபாடிகள் ஒருவருட சாப்பாட்டிற்கு குறைச்சலில்லாமல் ஒரு 'லக்' அடித்துவிட்டார். சமையல் மேற்பார்வை ஆத்துக்காரியைச் சார்ந்தது. அப்புரம் சொல்லவேண்டுமா! கல்யாண மேற்பார்வை கன பாடிகளைச்சார்ந்தது.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

புரட்சிக் கவிஞரின் புதிய நூற்கள்.

காதலா கடமையா ?| ...	ரூ. 1 -4-0
கடல் மேற்குமிழிகள் ...	,, 0-12-0
திருமணம் ...	,, 0-10-0
இருண்ட வீடு ...	,, 0-10-0
அகத்தியர் விட்ட புதுக் கரடி ...	,, 0- 4-0
இந்தி எதிர்ப்புப் பாட்டு...	,, 0- 4-0
திராவிடர் திருப்பாடல்...	,, 0- 4-0

கிடைக்குமிடம்
பாரதிதாசன் பதிப்பகம்
95. பெருமாள் கோயில் தெருவு
புதுச்சேரி

தொழிலாளர் பிரச்னையில் நம் கழகம் கொண்டுள்ள கருத்து !

T. S. S. மணியன், T. V. மலை

1. பாட்டாளி மக்களே பெரிதும் சுரண்டப் படுகிறார்கள். முதலாளி வர்க்கத்தாலும், புரோகித வர்க்கத்தாலும், தொழிலாளர் கிளர்ச்சிகளின் போது பொருளாதாரப் ப்ரச்னையை மட்டுமே கவனித்தால் போதும் என்று எண்ணுகிறார்களே யொழிய புரோகிதப் பிடியிலிருந்து விடுபடும் முயற்சியைப் புறக்கணித்து விடுகின்றனர்.

2. திராவிட இனத்திலே மிக மிகப் பெரும் பகுதியினர் பாட்டாளிகளே. ஆரிய இனமோ பாடுபடாத பிறவி முதலாளி வர்க்கம். ஆகவே ஆரிய—திராவிடப் போர் என்பது அடிப்படையிலே பார்த்தால், பொருளாதார பேத ஒழிப்புத்திட்டந்தான்.

3. ஜாதி முறை, சடங்குமுறை என்பன வெல்லாம் தந்திரமாக அமைக்கப்பட்ட, பொருளாதாரச் சுரண்டல் திட்டமேயாகும். ஆகவே ஜாதி முறையை ஒழிப்பதும சமதர்ம திட்டந்தான்.

4. தொழிலாளர்கள் ஆரிய ஆதிக்கத்தை அகற்றாமல், பொருளாதாரத் துறையிலே எவ்வளவு முன்னேறினும், அவர்களுடைய வாழ்வு மலர முடியாது. ஆகவே அவர்கள் ஆரிய ஆதிக்கத்தை அகற்றவேண்டும்.

5. பாட்டாளிகள் என்றால், ஆலைத் தொழிலிலே ஈடுபட்டு, சங்கம் அமைத்துக் கொண்டு. கூலி உயர்வு. குடி இருக்கும் வீட்டு வசதி, சுகாதார வசதிகள் ஆகியவைகளுக்ககாகக் கிளர்ச்சிகள் நடத்துபவர்கள் மட்டு மல்ல. பண்ணைவேலை செய்பவன். கல் உடைப்பவன். கட்டை வெட்டுபவன் குப்பை கூட்டுபவன், போன்ற சங்கமோ. கிளர்ச்சி செய்யும் உணர்ச்சியோ கூடப் பெறுமல், சிதறி வாழ்க்கையைச் சிதைத்துக் கொண்டுள்ள கோடிக்கணக்கான தொழிலாளர்களையே குறிப்பதாகும்.

6. தொழிலாளர்கள் அவல வாழ்வு பெற்றிருப்பதற்குப் பெரிதும் காரணமாக இருப்பதும், அவர்கள் எழுச்சி பெற்று, உரிமைப் போருக்கானவகை தேடிக் கொள்ளாமலிருப்பதற்கும் காரணமாக இருப்பது மதத்தின் பேரால் அவர்கள் மனதிலே திணிக்கப்பட்டுள்ள மூட நம்பிக்கைகளேயாகும் ஆகவே அவற்றினின்றும் விடுபடுவது தொழிலாளர்களின் விடுதலைக்கு முக்கியமான முதற்காரியமாகும். இதனைச் செய்யாமற் போனல். இன்று தொழிலாளர்களின் மனதிலே குடிகொண்டுள்ளபழைய கால நம்பிக்கைகளை உபயோகப் படுத்திக் கொண்டு. தந்திரக்காரத் தன்னல அரசியல் கட்சிகள் புரோகித வகுப்பாரின் கூட்டுறவுடன். தொழிலாளரை நசுக்கி விட முடியும்.

7. திராவிட நாடு திராவிடருக்கு ஆகவேண்டும் என்று கூறும் போது. பாடுபடும் இனத்தைப்பாடுபடாத இனம் சுரண்டும் கொடுமையும். பாடுபடும் இனம் தன்னுடைய மனதிலே பூட்டிக் கொண்ட தளைகளால். அடிமைபட்டுக்கிடக்கும் கேடும் ஒழிய வேண்டும் என்ற எண்ணத்தை யே தான். வேறு வார்த்தைகளால் கூறுவதாகலாம்.

அவர்கள் சொன்னார்கள் !

(மா. சு. தொகுத்தது.)

''நால்வருண மாச்சிரம மாசாரமுதலாநவின்ற கலைச்சரித மெல்லாம் பிள்ளைவிளை யாட்டே''

—இராமலிங்கர்.

''ஆச்சரிய சித்திகள் காட்டுவதாகச் சொல்லும் மனிதர் இருக்குமிடத்துக்கு போக வேண்டாம். அவர்கள் உண்மை நெறியினின்றும் தவறி விட்டார்கள்''

—ராமகிருஷ்ணபரமஹம்சர்

''கல்லைக் குவித்து கோயில்கள் ஏன் கட்டுகின்றீர்கள்? தெய்வம் எங்களுக்குள்ளே இருப்பதை அறியாமல் வீணாக ஏன் தொல்லைப்படுகிறீர்கள்?''

—வேமன்ன கவி

''எவன் வந்தாலும் சரி, அவனிடமுள்ள தெய்வத்தை நான் பார்ப்பதற்கு தடையுண்டாகிறது. ஒவ்வொருவனும் தன்னுள்ளே இருக்கும் திருக்கோயிலின் கதவுகளை மூடிவைத்துவிட்டு மற்றொருவனுடைய தெய்வத்தையும், மற்றொருவனுக்கு வேறொருவன் சொல்லிய தெய்வத்தையும் பற்றிப் பொய்க்கதைகளை என்னிடம் சொல்ல வருகிறான்''

—அமெரிக்க ஞானி எமர்சன்

விளம்பர விகிதம்

1. அங்குலத்திற்கு ரூ. 3.

நீடித்த விளம்பரங்களுக்கு தனி சலுகை காட்டப்படும், விபரங்களுக்கு,

நிர்வாகி,
உடுமலை பீரங்கி.
சென்னை 3.

இரத்தக்கண்ணீர்

(லெமூரியன்)

எத்தனையோ மேடைப் பேச்சுக்கள் சாதிப்பதை ஒரு நாடகம் சாதித்து விடுகிறது. அத்தகைய தொரு நல்ல பிரச்சார சாதனம் நாடகம். ஆனால் சிலர் கலை, கலைக்காகவேதான் எனக் கதைப்பார்கள். ஆனால் எந்தக்கலையும் பச்சைப் பிரசாரம்தான் என்பது அந்த பரமாத்மாக்களுக்குத் தெரிவதில்லை. புரிவதுகூட இல்லை. சிற்பமும், இசையும் கலைகள் என்றால் அவை தமிழரின் பண்பையும் அறிவையும் பரப்பு என்ற பிரசாரந்தானே? அத்தகையதொரு பிரச்சாரத்தை நடிகவேள் M. R. இராதா செய்து வருகிறார் என்பதை மறக்கவோ, மறுக்கவோ முடியாது. இப்போது திருச்சியிலே அவர் நடத்தும் நாடகம் "இரத்தக் கண்ணீர்" திருவாரூர்த் தோழர் தங்கராசு கதை எழுதியிருக்கிறார். கதை மிக உயர்ந்தது என்று கூறிவிட முடியாது ஆனால் அதன் அமைப்பும் இராதா அவர்களின் நடிப்பும் கதைக்கு புது மெருகு கொடுக்கின்றது.

"மேல் நாடுகள் பல சென்று கலை பல கற்று திரும்புகின்றனர் மோஹனும் (இராதா) பாலுவும் (கதாசிரியர்) பாலு தன் கல்வியை சமுதாய சீர் திருத்தத்திலும் நாட்டுக்கான நல்ல பணியிலும் செலவிட விரும்புகின்றான். மோஹன் கலையை வளர்ப்பதே தன் நோக்கம் எனக் கூறிக் கொண்டு, கட்டிய மனைவியை கைவிட்டுவிட்டு காந்தாவுடன் திரிகிறான். இவனுக்குபெரும் வியாதி வந்து விடவே காந்தா அவனை வீட்டை விட்டு விரட்டுகிறாள். கண்ணிழந்து, அலைந்து திரிந்த பின் பாலுவையும், சந்திராவையும் தெரிந்து கொள்ளுகிறான். தன்னால் தன் மனைவி வாழ்க்கை இன்பமறியாது வாடும் நிலைக்காக வருந்தி அதற்கு பரிகாரமாக தன் மனைவியை தன் நண்பன் பாலுவுக்கே மண முடித்துக் கொடுத்து விடுகிறான்—இதுதான் கதை. நாடக ஆரம்பத்தில்இராதாபொதுக் கூட்டத்தில் பேசுகின்ற பகுதியில் "97 பேர் முட்டாள்கள் உள்ள நாட்டில் ஓட்டு பெற்று மந்திரியாக வருகிறவர்கள் யாராக இருக்க முடியும்"? என்ற பேச்சும் அர்த்த மற்றபடி கூட்டங்களுக்கு பொருத்தமிலாத ஆட்கள் தலைமை தாங்குவதை கண்டிக்கும் வகையில்—தன்னை நண்பன் பாலு நகரசுத்தி தொழிலாளர் சங்கத்தில் பேச அழைக்கையில் கூறுகிற பேச்சும் சிந்தனைக்கு சீட்டு விடுகின்றன. பார்க்கில் உலவுகிறபோது அங்கு வருகிற குஷ்ட ரோகியைக் கண்டு "குஷட ரோகிகளை எல்லாம் பார்க்கில் விடலாமா? நேஸ்டி முனிசிபாலிடி ஹூயிஸ் தி ஹெல்த்ஆபீஸர்" (who is the health officer) என்ற ஆங்கிலப் பேச்சைகேட்கும்போது பக்கத்திலிருக்கும் பார்க் நம் நினைவுக்கு வருகின்றது. நாட்டியத்தைப் பற்றி பேசுகிறபோது "நாட்டியம் வருங்காலத்தில் நல்ல பிஸினஸ்—பொம்புளை ஆடுறாண்ணு மந்திரிகளும் கவர்னர்களும், வந்து குமிஞ்ராங்களே "என்ற பேச்சும், நாய்க்குக் கூட நான் பேரிஸ் பின்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

வரப் பெற்றோம்

"தீ"

ஆசிரியர் பத்மன் செல்லப்பன்

விலை அணா இரண்டு

2-4-49 முதல் தஞ்சையிலிருந்து நல்ல விறுவிறுப்பான நடையில் வெளி வருகிறது, ஒடிந்த உள்ளத்திற்கு ஊக்க மளிப்பது. மடமையைக் கொளுத்தும் தன்மையது.

முகவரி

"தீ" தீ. அலுவலகம்,
தஞ்சாவூர்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கட் போட்டு வளர்த்தேன் நீங்க என்னடாண்ணா மனுசனுக்கு சோறு போட மாட்டேங்கிறீங்களே"—என்ற பேச்சும், தன்மேல் நாட்டு அனுபவத்தை கூறுகையில், "ஒட்டாவோ பவடர் பூசி மெக்ஸிகோ மை அணிந்து அர்ஜண்டைனா ஆடைகளுடன் பேரிஸ் பெண்கள் ஆடுவதல்லவா ஆட்டம் அதைப் பார்த்தால் இவர்கள் எடுக்கனும் ஓட்டம் "என்ற பேச்சும்" சர். ஆர். கேயும் சர். ஏ. ராமசாமியும் படிச்சாங்க, படிச்சாங்க என்றால் எதற்குபடிச்சாங்க? ஏமாந்தவங்களை எத்திவாள நாள் அப்படியில்லீயே கலைக்காக படிச்சேன், கலையை வளர்க்கிறேன் காந்தா மூலம "என்ற பேச்சும்," நேப்பிள்ஸ்' நகரில் ஆப்பிள்ஸ்' நிறத்தினர், 'கப்பிள்ஸ்'களாக கைகோர்த்துச் செல்லும் காட்சி........என்ற பேச்சும் சிரிப்புக்கும் சிந்தனைக்கும தரப்படும் சிறுசிறு இஞ்செக்ஷன்கள்.

நாடகத்தின் பிற் பகுதியில் கண்ணிழந்த குஷ்டரோகியாக நடிக்கும் நடிப்பு மிக, மிக, அபாரம் சத்திய வாணி சினிமாவை விட) அவருடைய நிழல் கூட சில இடங்களில் நடிக்கிறது. அநேக மாக மற்ற அனைவரும் திறம்படவே நடிக்கின்றனர். பாலு வாக நடிக்கும் தங்கையன் (கதாசிரியர்) மேடையை இன்னும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இன்னும் சிறிதுமுயன்றால் வசனத்தைநன்கு அழகாகப் பேசலாம். மோஹன் ஆடம்பரவாழ்க்கையில் திமிர்பிடித்து அலைந்த போது தன்னைப்பற்றி பிறர் நகைத்ததற்கிணங்கவே தான் ஏழையாக, குஷ்டரோகியாகபோய் விட்டதாக நினைவு படுத்தும் வகையில் உள்ள எதிரொலிப் பேச்சுக்கள் தேவையில்லைதான். குஷ்டரோகியை பார்க்கில் கண்டு பழித்ததாலேயே தனக்கும் அது வந்து விட்டதாக நினைப்பதானது நீக்கப்படலாம்.! நடிகவேளின் நாடகங்களில் சாதாரணமாக யாரும் கூறக்கூடிய குறைகள் ரொம்ப 'ஓவர் குறைத்துக் கொள்ளலாம், பச்சையாக பேசுகிறார் பாலிஷாகஇருக்கலாம் என்பவைதான் அந்தக் குறை கூட இந்த நாடகத்தில் இல்லை. கச்சிதம்! 'போர்வாளை' 'சர்வாதிகாரி'த்தனத்தினால் தடுத்த 'மகாத்மா தொண்டர்'கள் செய்தது 'நல்ல தீர்ப்பு' அல்ல எனக்கூற 'தூக்கு மேடை' ஏறி, இரத்தக் கண்ணீர்' வடிக்கும் வருங்கால வீரன்! இராதா, விரைவில் 'மக்களாட்சி' நடத்துவார் என எதிர் பார்க்கின்றோம்.

வாழ்க அவர் கலை!

வளர்க அவர் நடிப்பு!!

வெல்க அவர் முயற்சி!!!

ஆசிரியருக்குக் கடிதங்கள்

திருவண்ணாமலை நகரசபை தலைவர் ப. உ. சண்முகம் மீது நம்பிக்கையில்லை என கொண்டுவந்த தீர்மானத்தை நிறைவேற்றுதற்காக 2-4-49ந்தேதி யன்று பிற் பகல் டிப்டி கலெக்டர் முத்துசாமி படையாச்சி அவர்கள் தலைமையில்12-30 மணிக்குகூட்டம் ஆரம்பமாயிற்று. ஏற்கெனவே அவர்மீது நம்பிக்கையில்லை யென அறிவித்துள்ள 16 நகரசபைஉருப்பினர்களில்13 உருப்பினர்களே வந்திருந்தனர்.

தலைவர் ப. உ. சண்முகம் பெயரில் நம்பிக்கையுள்ள உருப்பினர்கள் அதிகம் இருந்ததால் நம்பிக்கையில்லாத்தீர்மானம் தோல்வியுற்றது இந்த நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டதற்கு காரணம் துணை தலைவர் மாணிக்கவேலு என்பவர் தலைவர் ப.உ. சண்முகத்திற்கு கொடுக்கவேண்டிய பாக்கியைகேட்டதின்விளைவுதான். இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேறுவதற்கு உடைந்தையாக இருந்தவர்களை கீழே குறிப்பிட்டுள்ளோம்

(1) துணை தலைவர்மாணிக்கவேலு பிரபல மோட்டார் மன்னர் (2) உயர்திரு T.V.தியாகராஜ முதலியார் (3) கொரடா சுப்பிரமணியம் (4) அண்ணாமலை பிள்ளை M. L. A (5) கதிர்வேலு பிள்ளை (6) அண்ணாமலை பிள்ளை காங்கிரஸ் கமிட்டி தலைவர் மேலே குறிப்பிட்டவர்கள் அனைவரும் செய்த சூழ்ச்சியின் விளைவால் அவர்கள் எதிர் பார்த்ததற்கு நேர் மாறாக எல்லோரும் சேர்ந்து ஒரே சமயத்தில் மண்ணைக் கவ்வினர் முன்னுக்குப்பின் முரணாகமுடித்ததற்கு தலைகவிழ்ந்தவண்ணமாக உள்ளனர். இனிமேலாவது நேர்மையாக நடப்பார்களா காங்கிரஸ் தோழர்கள் நி—ர்

T. S. சுப்பிரமணியன்
திருவண்ணாமலை

உங்கள் சீரிய சிந்தனைக்கு!

1. வீட்டை விட்டு வெளியே புறப்படும் ஒவ்வொரு வேளையும் ஏதொரு காரியம் செய்ய எத்தனிக்கையிலும் நாழிகை, வேளை பார்ப்பது சரியா?

2. அப்படியே நல்லவேளை, காலம், சகுனம் எனக் கருதப்படும் சமயங்களில் செய்யப்படும் ஒவ்வொரு காரியமும், வேலையும் வெற்றியடையும் எனக்கூற முடியுமா?

3. மற்றவேளைகளில் துவக்கப்படும் அல்லது செய்யப்படும் காரியங்கள் வெற்றி பெறா என்றாவது சொல்லமுடியுமா?

4. ஒருவன் வெற்றி பெறுவதும் தோல்வியடைவதும் அவனவனின் சமய சந்தர்ப்ப சூழ்நிலை தானே காரணம்.

5. கொழுத்த இராகுவேளையில் புறப்படும் இரயில் வண்டி இடை நடுவில் கவிழ்ந்துவிடுகிறதா? பிறக்கும் குழந்தை வளர்ந்து வாலிபம் அடைவதில்லையா? புத்தியறியும் பெண் தாயாவதில்லையா? திருமணம் செய்யின் சதிபதிகளாக ஒத்து வாழ்வதில்லையா?

6. பஞ்சாங்கத்தைப் புரட்டுவதும், ஜாதகத்தைத் திருப்புவதும், கன்னத்தில் கைவைத்து உட்காருவதும் அறிவுடைய மாந்தர்க்கு அழகென எப்படிச் சொல்லமுடியும்?

7. பஞ்சாங்கத்தின் பேரிலும், ஜாதகத்தின் பேரிலும், புரோகிதர்களின் பேரிலும் கைவைத்து அலைவதென்பது சுயச்செயலற்று, தன்நம்பிக்கை யிழந்து சுயமரியாதையை பறிகொடுத்து தன் தலையில் தானே கொட்டிக்கொண்டு கீழும் மேலும் பேந்தப்பேந்த விழிக்கவேண்டிய கேவலமான நிலையை ஏற்படுத்திக் கொள்வதற்கான வழியல்ல வென்றாவது சொல்ல முடியுமா?

"குண்டாந்தடி"

இது உண்மையா?

1. திருவண்ணாமலை கூட்டுறவு பண்டகசாலை மூலம் நடைபெறும் ஐந்து (5) நிவாரண கடை (Relief Ration Shop) களில் அரிசியளசர் ஒரு படி ஒன்றுக்கு 0-10-1 வீதம் நிர்ணயித்து இருக்க கள்ள மார்க்கட்டில் 1-படி 0-10-8 ஆக விற்றது உண்மையா?

2. இதை கண்டு பிடிக்க சில கதர்சட்டைத் தோழர்கள் T.S.O. விடம் (Taluk Supply Officer) அறிவிக்கப் போகிறார்கள் என்று தெரிவதுடன் கூட்டுறவு பண்டக சாலைகளின் நிர்வாகிகள் சில மிகப் பெரிய கதர்சட்டை தோழர்களை அழைத்துச்சென்று T.S.O.விடம் ஓலமிட்டு ஒப்பாரி வைத்தது உண்மையா?

3. மிகுதியாக ஏழைமக்களிடம் வாங்கிய ஏழு பைசாவை திருப்பிக் கொடுத்துவிடு என்று நிர்வாகிகள் தனது சிப்பந்திகளுக்கு கட்டளையிட்டது உண்மையா?

4. படி ஒன்றுக்கு ஏழு பைசா வீதம் வசூலித்த தொகை சுமார் ரூ. 500-0-0 (ஐந்துகடைகளின்மூலம்) இந்த மோசமான பண சேமிப்பை வெளிப்படையாக்கி ஏழை மக்கள் முன் அங்கைக்கனிபோல் தெரிவிக்கவில்லையானால் இந்தத் தொகை யாருக்கு எதற்காக எப்பொழுது பயன்படும்?

5. கூட்டுறவு பண்டக சாலைக்கென வாங்கிய சுமார் ரூ. 300-0-0 பெருமான B. S. A. ஈருருளி (Bycycle) தனிப்பட்ட ஒரு சிலருக்கு தம் தம் செயலுக்காக பயன்படுத்துவது உண்மையா?

6. அவர்கள் தவறு வெளியாகவே சிலர் பெரிய அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்போகிறார்கள் என்பதை கேள்விப்பட்ட வுடனே இது எங்கள் ஆட்சிதானே இவர்கள் என்ன செய்யமுடியும் என்று தப்பட்டம் அடிப்பது உண்மையா?

"குண்டாந்தடி"

வரப்பெற்றோம்

தென்னாடு (மாத வெளியீடு)
ஆசிரியர் S. R. சாமி.
விலை அணா 2. பக்கம் 20.

பகுத்தறிவூட்டும் அழகிய கட்டுரைகளையும் கவிதைகளையும் தாங்கி வருகிறது. ஒவ்வொருவரும் அவசியம் படிக்கவேண்டும்.

கிடைக்குமிடம் :—
தென்னாடு, அலுவலகம்
சாக்கோட்டை, கும்பகோணம் வழி.

"அரேபியா சூரியன்"
(முதற்பாகம்)
ஆக்கியோர் மவுல்வி M. S. கமால்.
"நாத்திகம் பரவட்டும்"
20 பக்கங்கள் விலை அணா 6
இலக்கியப்பாசறை
140, ஆழ்வார்ப்பேட்டை தெரு,
ஆழ்வார்ப்பேட்டை, சென்னை.

கேப்டன் புருசும் கோட்சேக்களும்

"அறிவழகன்"

"கண்ணே! என் காதற்கனியே! கோடிகோட்களாக தேடியலைந்த தெவிட்டாத தேன்கனியே! என் இச்சையை போக்கவல்ல பச்சை கிளியே! மான் விழிமாதே! மானிலம்புகழும்மரகதமே கட்டுக்கடங்காத காதற் கனிரஸமே! வா வா, என் அருகே வா; உன் செவ்விதழ் பூத்து ஓர் முத்தான சொல் உதிர்த்திடுவாய், உனக்கு என்னவேண்டும்? மாடி வீடு வேண்டுமோ? அல்லது இராஜபோகம் வேண்டுமோ? தாதியர் சூழ தங்க மஞ்சத்திலமர வேண்டுமோ? இல்லை என் உயிரேவேண்டுமோ? சொல்! சொல்!! சீக்கிரம் சொல்!!! இதோ! நானிருக்க பயமேன் உனக்கு, பேசு நன்றாகப்பேசு! பதில்பேசமாட்டாயா? இது உன் கற்பின் கர்வமா? நீ இப்போது பேசாவிடில் என் உயிர் நிலைக்காது. தற்போது என்உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. உன் கண்களுக்கு புலப்படவில்லையா? உன் முத்து பவளங்கள்போன்ற பற்களைத் திறந்து ஓர் வார்த்தை கூறேன். நான் இந்நாட்டில் இன்னும் சிறிது காலத்துக் காவதுவாழவேண்டாமா? ஆம்!உன்னை எவ்வளவு கெஞ்சியும் பயனில்லை. இனி பலாத்காரம் தான், ஆம்! என் இச்சையைப் பூர்த்திசெய்துகொள்ள பலாத்காரம் எனும் ஒரே வழிதான். வேறு வழியில்லையே மானே! நான் என்ன செய்வது? இன்றேல் என் உயிரையே இழக்கவேண்டி நேரிடும். இந்நிலையிலுள்ள நான் என்ன செய்வேனடி குயிலே! உன், காரிருள் மேகத்தையும் பழித்திடும் கருங்கூந்தலினால் வேண்டுமானாலும் என்மீது வீசு' ஓர் முறை வீசு!! என் உயிர்வாழவீசு!!! பதில்கூற மாட்டாயா?"

இது கேப்டன் புருஸ் எனும்ஆங்கில வீரன் முத்துவடிவு எனும் மாதுவிடம் கி. பி. 1799ம் ஆண்டு காமத்தின் மேலீட்டால் கூறிய சொற்றொடர். இது சரித வரலாறு. ஆங்கிலேயர்களின் அநீதி ஆட்சியின் விளைவால் ஏற்பட்ட அக்கிரமத்தின் போக்கு. ஆனால் கி.பி. 1949ம் ஆண்டு இதேபோல நடக்கிறதென்றால் நீங்கள் ஆச்சரியப்படாமல் இருக்க முடியுமா? நடந்துதான்வருகிறது. நீவிரும் கண்டும் வருகிறீர்கள். கேப்டன் புருஸ் என்பவன் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் வெறியென்கிறீர்கள்; ஆனால் இன்று நடப்பதை ஆரிய ஏகாதிபத்தியத்தின்வெறியென்று நீங்கள் கூற மறக்கிறீர்கள் காரணம் அவ்வளவுஇருட்டடிப்பு செய்யப்பட்டு வருகிறது. அதற்காகவே தான் ஆங்கிலம் மறைக்கபட்டு அந்த இடத்தில் இந்தி எனும் மாட்டையே விடுகின்றனர். ஆளவந்தோர்கள் போலும். இது எவ்வாறோ தொலையட்டும்.

கேப்டன் புருஸ், முத்து வடிவு எனும் அம்மாதிடம் கண்டவாறு உளறிக்கொட்டியது காமவெறி. இதுபோலவேதான் சென்னை மவுண்ட் ரோடிலிருந்து ஒரு மகாவிஷ்ணு புறப்படுகிறார் மகா மேதாவிபோல! இவரும் கண்டவாறு உளறிக் கொண்டிருக்கிறார் மதவெறியால்.

கேப்டன் புருஸ், சாதிக்க இயலாத செயற்கரிய காரியத்தையும்செய்வதாக செப்படிவித்தை செய்கிறான். நடவாத செயல்களையும் நாசுக்காக ஓதுகிறான் முத்துவடிவிடம், சிற்றின்பத்துக்காக! இதேபோலத்தான் வீணன் விப்பிர கூட்டத்தில் உதித்த ஓர் பூசுரர் புறப்பட்டிருக்கிறார் திரித்துகூற, சுகபோக வாழ்வுக்காக!

கேப்டன் புருஸும், மாதிடம் 'உயிரே போகும்' என உரைக்கின்றார் காமநோயின் துன்பத்தால்! அதேபோலவே மகாத்மாவை மாண்டொழித்த மரபினிலே பிறந்த ஓர் குல்லுகபட்டர் புறப்பட்டு உண்மை உரைப்போரை உதாசினம் செய்து வாதுக்கிழுக்கிறார், பொருளாதார துறையின் வக்கற்ற காரணத்தால்!

பேச்சிலே காரியம் இயலாத காரணத்தால் பலாத்காரத்தில் இறங்குகிறார் கேப்டன் புருஸ், முத்துவடிவிடம் இவ்வாறேதான், சுமங்கலீபவ! என ஆசீர்வதிக்கும் அமங்கலியின் சத்புத்திரனான ஓர் உஞ்சிவிர்த்தி புறப்பட்டிருக்கிறார், தாறுமாறாக கற்பனையால் தாக்கிவருகிறது தான்தோன்றிதனத்தால்!

ஆனால் கேப்டன் புருஸ் ஆங்கில வீரன்—இவர்களோ. கைபர்போலந்து கணவாய்களின் வழியாக ஆடுமாடு மேய்த்துக்கொண்டுவந்த இடையர்கள்.

கேப்டன் புருஸோ படை வரிசையின் முதல்வரிசையில் நிற்பவர்-ஆனால் இவர்களோ முட்டாள் பத்திரிகையின் முதல்வரிசையில் நிற்பவர்கள்.

கேப்டன் புருவிடமோ துப்பாக்கியிருக்கும்—ஆனால் இவர்களிடமோ காய்ந்த புல்லும், கிழிந்தபஞ்சாங்கமும் இருக்கும்.

கேப்டன் புருஸோ தன் மனைவியினால் இச்சை தீராது பிறர் மனைவியை நாடினார்—ஆனால் இவர்களே தன்னால் தன்மனைவியை அடக்க இயலாது, பிறரிடம் வாடகைக்கு விடுதேதுசுடரொளி தாங்கி நிற்கும் சுந்தரபுருடர்கள்.

கேப்டன் புருஸோ தானே பிறரிடம் யாசிப்பது கேவலமென கருதுபவர்-ஆனால் இவர்களோதான் சென்று யாசிப்பதில் பயனில்லை என் அறிந்து தனது பக்குவமடைந்த அருந்தவப் புதல்வியை அழைத்துச்சென்று யாசிப்பவர்கள்.

கேப்டன் புருஸோ வீரத்தைகாட்டி பதவிபெற்றவர்—ஆனால் இவர்களோ தன் தமக்கையை தாளம் போடச்செய்து சொந்த செல்வியை சதிர் ஆடச்செய்து அவரின் இச்சைபோக்க பச்சைக்கிளியான தனது பேத்தியை பயன்படுத்தி, மனைவியை மண்டியிடச் செய்து தானும் மாமாவைப் போல் நடித்து காதலின்பத்திலே ஆழ்ந்திருக்கும் அவரிடம் நயமாக பேசி பட்டம் பதவி பெற்றவர்கள் தான் இந்த கோட்சே பரம்பரையினர்.

அறிவிப்பு

கட்டுரை, கவிதை அனுப்புவோர் காகிதத்தின் ஒரு பக்கம் மையினால் தெளிவாக வரையவும். அச்சிடப்படாதவைகள் திரும்ப வேண்டுவோர் போதிய தபால் தலைகளுடன் அனுப்புவது நலம். தவறாது தங்கள் தங்கள் தெளிவான முகவரியையும் தந்தால்தான் பார்வைக்கு படி அனுப்ப இயலும்.

ஆசிரியர்,
உடுமலை பீரங்கி.
சென்னை. 3,

விற்பனையாளர்கள் தேவை.

கீழ்கண்ட ஊர்களில் நமது "உடுமலை பீரங்கி"க்கு முன் பணம் கட்டக்கூடிய திறமை வாய்ந்த விற்பனையாளர்கள் விண்ணப்பிக்கவும்,

திருச்சி
திருவள்ளூர்
உடுமலை பேட்டை
ஊர்காம்
வேலூர் (நா. ஆ.)
வல்லம்
தாராபுரம்
தனுஷ்கோடி
ஆம்பூர்
ஆனைமலை.
செங்கோட்டை
சென்னிமலை.
சிவகாசி.
சீயாழி.
பண்ருட்டி

"உடுமலை பீரங்கி"

வரி விளம்பரங்களுக்கான விகிதம்

நன்றியறிவிப்பு, திருமணம், தேவை, விற்பனை, இயந்திரம், முகவரி மாற்றம், பிறப்பு, புத்தகங்கள், மற்றும் வியாபாரச் சிறு விளம்பரங்கள்.

வரி ஒன்றுக்கு அணா. 8,
4. வரிகளுக்கும் அதற்கு
குறைந்ததற்குப் ரூ, 2.

நிர்வாகி,
உடுமலை பீரங்கி.
சென்னை 3.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

ராமலிங்கத்திடம் திரு-அழகும் இல்லை. மணம்—வாசனையுமில்லை. இரண்டு மற்ற இருமல் நோய் பிடித்தவன். திருமணத்திற்கு முதலிலேயே இருமல்தான். பணக்காரன் அல்லவா? அதனால் பட்டுத் திரையிட்டு மறைத்து விட்டார்கள். போதாக் குறைக்கு கனபாடிகள் வேறு.

கல்யாணமாகி மூன்றுமாதத்திற்குள் தனிக் குடும்பம் நடத்தினர். காரணம்? பாக்யத்தின் நாகரீகப் போக்கு மாமனார் மாமியாருக்குப் பிடிக்கவில்லை. அவள் இவ்வளவு நாளாக செல்வமாக—சுகமாகஇருந்தவள். இப்போது அதெல்லாம் அவர்களுக்குப் பிடிக்குமா என்ன? அவளும் தனிக் குடும்பத்தையே விரும்பினாள். அதன்படி தனது இல்லத்தில் தனியரசுசெலுத்தினாள் சுகத்தை அடைந்தாள். அதற்கேற்ற இன்பத்தை அடைய எத்தனித்தாள். கனவானால் முடியாது காரணம் கடுமையான இருமல். இன்பத்தை இம்மியும் நுகர முடியாது!

அவனுக்குக் கடுமையானஇருமல் அவளுக்குக் கடுமையான காமம். என்னசெய்வாள் பாவம்! தனது ஆசையைத் தீர்த்துக்கொள்ள இப்படி ஆரம்பித்தாள்.

வண்டிக்கார ரங்கன். வாலிபன் மைனரல்ல. முகத்திலே களையும், புன்சிரிப்பும் உடலிலே ஒரு யௌவனத்தோற்றமும் அவனிடத்தில் விளையாடும். சிறுவயதிலிருந்து ராமலிங்கத்தின் வீட்டில் வண்டி ஓட்டிக் கொண்டிருந்தவன். இப்போது ராமலிங்கம் தனியாக வரவே அவனும் ராமலிங்கத்தோடு வந்துவிட்டான்.

மாட்டுக்காவலாக மாட்டுக்கொட்டகையிலேயே அனுதினமும் படுத்துக்கொள்வான்

அன்றைக்கு பாக்யம் வீட்டிலேயே ஒருமூலையில் அவனைப்படுத்துக் கொள்ளச் சொன்னாள். அவனும் ஒருமூலையில் உருண்டு கிடந்தான்

மணி ஒன்றடித்தது, ரங்கனை எழுப்பி தன்வீட்டிற்குள் அழைத்துச்சென்றாள்...அவன் மறுத்தான்

கெஞ்சினாள் சாலைப் பிடித்து... எட்டி உதைத்தான்.

பணத்தைக்காட்டி ஆசையைத் தீர்த்துக்கொள்ள முயன்றாள்.

"அவுங்க உப்பைத் தின்னுட்டு அவுங்களுக்கே துரோகம் பண்ணா வேண்ணு நினச்சிகிட்டிங்களா? விடுங்கம்மா மரியாதையா! அய்யாவை எழுப்பனனுக்கு தெரியும்" என்று றுமினான்.

அதற்குள் அவனும் 'லொக்கு'... 'லொக்கு' என்றுஇருமினான். "பாக்யம் தண்ணி கொண்டா" என்றான். பாக்யமும் கண்ணைத் துடைத்துக் கொண்டு தண்ணீர் கொண்டு வருவதற்குள்ளாக தரையிலே கிடந்தான் உயிரற்ற பிணமாக.

தாய்தந்தை உறவினர் எல்லாம் மாறடித்து அழுதார்கள். அவளும் கூலிக்கு மாறடித்து அழுதாள்! சங்கு, கொட்டுமுழக்கோடு பிணத்தையும் எரித்தார்கள்.

பாக்யத்தின் கழுத்தில் உள்ள 'தாலி' மூன்றும் நாள் பறந்தது

அன்று கல்யாணத்தையும், கருமாந்திரத்தையும் மிக வெற்றிகரமாக முடித்துவைத்த கனபாடிகள் "பாக்யத்துக்கு குடுத்து வெச்சது அவ்வளவுதான் விதியாரைவிட்டது எல்லாம் அந்த பகவான் செயல்" என்று தனது பிரசங்கத்தை முடித்தார். மற்றவர்களும் "எல்லாம் அந்த பகவான்செயல்" என்றார்கள்

இந்திக்கு எங்கும் எதிர்ப்பே!

வங்க மொழியை தாய்மொழியாகக் கொண்ட பீகார் மாகாண. மான்பூம் மாவட்டமக்களும் இந்தியை கட்டாய பாடமாக திணிப்பதை எதிர்த்து. ஏப்ரல் 6-ம் தேதியிலிருந்து சத்தியாக்கிரகம் செய்து வருகிறார்கள்

நமது மதிப்பிற்குரிய கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் மேற்கு வங்கத்தில் கவர்னராக இருந்த காலத்தும். இந்தி மொழியை கட்டாய பாடமாக்கிய பொழுது வங்கமக்கள் அனைவரும் கட்சி பேதமின்றி ஒன்று திரண்டு எதிர்த்து வெற்றி பெற்றனர். இந்தி மொழியை தாய் மொழியாகக்கொண்ட ஐக்கிய மாகாணத்தை அடுத்திருக்கும் மான்பூம் மாவட்ட மக்கள், இந்தி மொழியை கட்டாய பாடமாக ஏற்றுக்கொண்டால் அதனால் அரசியல் துறையிலும் பொருளாதாரத்துறையிலும் முன்னேற முடியாது என்பதை உணர்ந்து இந்தி கட்டாய பாடமாக்கப்படுவதை எதிர்க்கமுற்பட்டுள்ளனர்

இதை உணர்ந்தே நமது அரும்பெரும் தலைவர் பெரியார் ராமசாமி. 1937-ல் காங்கிரஸ் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட கட்டாய இந்தி நுழைப்பை எதிர்த்து போர் புரிந்து 1001. படைவீரர்களுடன் சிறை புகுந்து, தாலமுத்து நடராசன் என்ற இரு இளம் காளைகளை பலி கொடுத்து வெற்றி கண்டார். இரண்டாவதாக காங்கிரஸ் ஆட்சி அமைந்த பிறகு கட்டாய இந்திக்கு இருக்கும் எதிர்ப்பினை அறிந்தும் முன்னாள் கல்வி மந்திரி இந்தி (அறியாத) அவினாசிலிங்கனாரால் புகுத்தப்பட்டிருக்கும் இந்தி மொழியை எதிர்த்து வரும் நமது கழகத்தையும். தோழர்களையும் தூஷித்துப் பேசி வரும் காங்கிரஸ் திராவிட தோழர்கள், பீகார் மாகாணத்தில் நடக்கும் மொழி போராட்டத்தை அறிந்து இனியாகிலும் தங்கள் போக்கை மாற்றி தாய் மொழிக்கு தொண்டு செய்வார்களா? என்று எதிர்பார்க்கிறோம்

தரணி சிரிக்குது காண்!

வையகம் வியந்த தன்று,
வீரத்தமிழ் நாட்டைக் கண்டு;
தாயகம் மறந்தா னின்று,
தரணி சிறிக்குது காண்!

காரணம் என்ன வென்று
கண்டிப்பாய் கேட்பீ ரன்றோ?
(உ)தாரணம் பற்பல, நான்
உடைத்திடு கின்றேன் தோழா!

விப்பிரன் வந்தா னிங்கு,
அப்பன் அவன்தா னென்றான்!
தப்பிதம் என்ற வனை
தந்திரத்தால் மாய்த்தா னையோ!

மதமெனும் சாக்கடை யோய்
விதவிதமாய் துராவச் செய்து
"சதிசெய் உன்னினத்தை" யென்றும்
விதித்தான் பல கட்டளையை

சாதி வெறி பிடித்து - தமிழ்
நீதியை சீர் குலைத்துத் - தா
யாதி என்றுகூட தலை தூக்கிப்பாராது
ஓயாது சண்டையிட்டான் உடன்பிறந்தகுருதியிடம்

அறிய நம் நெரிகளெல்லாம்
எரித்தான் மத கழலிவிட்டு
கத்து தின்றான் காகம்போல்
மதம் வளர்க! வளர்கவென்று!

கேட்டதை, நாளும் நம்பிடுவான்
கண்டதை கையெடுத்துக் கும்பிடுவான்
விண்டிடும் நல்லறிவை விட்டிடுவான்
குண்டனை சாமியென்று குதூகலமாய் கூறிடுவான்

மந்தமதிகொண்ட, இந்த மானிடனை
மறத்தமிழ னென் றெண்ணி
மனமுவந்து மொழியாதே யென்று
"தரணி சிரிக்குது காண்"........?

(புதுவை. க. ழோ. தமிழழகன்.)

மதிப்புரை

அணியுங்கள் கருஞ்சட்டை

தீட்டியவர்—. திருச்சி கூதரசன்.

விலை அணு 6 தபாற் செலவு 0-1-0

கிடைக்கு மிடம்

தோழமை பதிப்பகம்
94 95 புதுத் தெரு.
மண்ணடி, சென்னை. 1.

கருஞ் சட்டை ஒழிக என்ற புத்தகத்தின் மறுப்பே இப்புத்தகம் என்று முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் இதன் ஆசிரியர் 12,000 ஆண்டுகட்கு முன் இருந்த நிலையிலிருந்து இன்றைய நிலை வரையில் திராவிடர்களின் வரலாற்றை நுண்ணிய கருத்துக்களுடன் ஆராய்ந்து விளக்கப்பட்டிருக்கிறது, திராவிட வாலிபர்கள் ஒவ்வொருவரும் படித்து தெளிவடைய வேண்டியது. குறிப்பாக ஒவ்வொரு திராவிடர் இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டிய அரிய புத்தகம், இதை அச்சிட்டு திராவிடத்திற்கு தந்த தோழமை பதிப்பகத்தாரின் முயர்ச்சி பாராட்டுதற்குரியது.

இப்புத்தகம் நமக்களிக்கும் விருந்துகளில் சில பகுதி.—

(அ) எனக்குமட்டும் அதிகாரமிருந்தால் ஒரே சட்டத்தின் மூலம் கோயில்கள் மடங்கள் எல்லாவற்றையும் இடித்துத் தகர்த்து விடுவேன்; அங்குள்ள சிலைகளை எல்லாம்கூட பெயர்த்து எடுத்து விடுவேன்!

ஒரு காங்கிரஸ் M. L. A.

(ஆ) வளரும் கழகம் வன்மையுடனிருக்க, இனிய தமிழ் மொழி இன்புற்று வளர, இந்திக்கொடுமை தூள் தூளாக ஆணவ அரசாங்கத்தாரின் அநீதிமிகு கொள்கைகள் அழிந்து போக துப்பாக்கி குண்டுக்குக்கூட நெஞ்சைக் காட்டத்தயாராக இருப்போமே தவிர, மான மிழந்து வாழும் மதிகெட்ட மக்களாக ஒரு போதும் இருக்க மாட்டோம்.

(இ) ஆரியத்தின் முன் இஸ்லாம் வளர ஆரம்பித்ததில் வியப்பென்ன? இந்து மத ஊழலையும் அனுபவித்த தமிழர்களே பொறுமையை இழந்து முஸ்லீம் ஆனார்கள் தமிழ் நாட்டில் என்பதில் ஐயமேது?

(ஈ) நெசவுத் தொழிலாளியின் கண்ணீர் சிந்திக் கறையான துணிகள் முதலாளிகளின் உடலில் ஏறுகிறது. ஆடையின் அழகை ரசிக்கும் அழகேச முதலியார்கள் ஆதரவற்ற அந்ததொழிலாளியைப் பற்றி சிந்தித்தது உண்டா?

(உ) நிலத்தை பண்படுத்தி நெல்முத்துக்களை அள்ளிக்குவிக்கும் அவன் வாழ்க்கை நிலம் பண்படுவது தான் என்று? அவனது இறந்த வாழ்வு உயிர் பெறுமட்டும் அவன் கருஞ் சட்டை அணிவதில் தான் என்ன தவறுண்டு?

(ஊ) ஆங்கில, பனியா, பார்ப்பன ஏகாதிபத்தியங்கள் என்ற மூன்று சுமைகள் திராவிடன் மீது இருந்தன, இப்போது ஆங்கிலமூட்டை இறக்கப்பட்டு விட்டது முதுகில் எஞ்சி இருப்பதோ இரண்டு அழுத்தமான மூட்டைகள். இதற்கும் முடிவு ஏற்பட்ட பிறகு அல்லவா? நீ காணும் சுதந்திரம் திராவிடா?

(எ) பார்ப்பானும் பனியாவும் ருசி கண்டு விட்ட பூனைகள் உன் முதுகை விட்டு, நாட்டை விட்டு தாமாக இறங்க மாட்டார்கள். அவர்களை நீயேதான் இறக்க வேண்டும். இறங்க மறுத்தால் கீழே தள்ளவும் தயங்கக் கூடாது. அப்பொழுது தான் உனக்கு விடுதலை உண்டு.

இது போன்ற உணர்ச்சி மிக்க உள்ளத்தை தொடும் கருத்துக்கள் பல மலிந்து கிடக்கின்றன.

'உடுமலை பீரங்கி'

முதற் புத்தகம்

விலை அணு. 6, பக்கம் 120,

தேவைக்கு முந்துங்கள்.

விற்பனையாளர்கட்கு 25% கழிவு தரப்படும்.

1. புத்தகம் வேண்டுவோர் அணு 7½-க்கு தபால் தலைகள் அனுப்பவும்.

கிடைக்கும் மிடம்

உடுமலை பீரங்கி

33. திருவேங்கிட முதலி தெரு

பெரிய மெட்டு சென்னை. 3.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

சந்தா விபரம்

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்

தனிப் பிரதி	ரூ. 0-1-3
6 மாதங்களுக்கு	ரூ. 3-0-0
1 வருஷத்திற்கு	ரூ. 5-0-0

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை:

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்

காரியாலயம்

33, திருவெங்கிட முதலித் தெரு,
பெரியமேட்டு, சென்னை.

★

எல்லா ஊர்களிலும்,
'ஹிக்கின் பாதம்ஸ்' ரெயில்வேஸ்டாலகளிலும் கிடைக்கும்.

ஏசண்ட் தோழர்கட்கு

ஒவ்வொரு வாரமும் ஏசண்ட் தோழர்கள் பில்லை எதிர்பார்க்காமலே தங்கள்கழிவுதொகை போக மீதி தொகையை அனுப்பிவிடுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

நிர்வாகி
உடுமலை பீரங்கி

(முதல் பக்கம் தொடர்ச்சி)

பிடிக்க முயற்சிக்க உடனே அக்காமதேனு வெகுண்டு அரசனது பரிவாரங்களை சின்னாபின்னப்படுத்தி தேவலோகம் போய்விடவே அரசன் இம்முனிவனன்றோ இப்பசுவை நம்பரிவாரங்களின்மேல் ஏவி விட்டுவிட்டான். அவனை சும்மா விடக்கூடாது என்று எஞ்சியிருந்த தன் பரிவாரங்களுடன் அம்முனிவனைச் சூழ்ந்து தாக்க ஆரம்பிக்க சினங்கொண்டு முனிவன் தன் இரண்டுகண்களையும் விழித்துப்பார்க்க அரசன் ஒருவன் தவிர பாக்கியுள்ள யாவரும் எரிந்து சாம்பலாகிவிட்டனராம். பின் மன்னன் மனம் வருந்தித் தானும் அம்முனிவனைப்போல் ஆக்கல் அழித்தல், காத்தல் ஆகிய சக்திகளைப் பெற கடினமான தவம்செய்து பிரம்மதேவனால் கோரிய வரத்தையும் இராசரிஷி என்ற பெயரையும் பெற்றதாகக்கூறப்படுகிறது.

அரசன் தன் எஞ்சிய பரிவாரங்களுடன் வசிஸ்ட முனிவனைத்தாக்கிய போது முனிவன் கண் விழித்துப் பார்க்க அரசன் போக பாக்கியுள்ள பரிவாரங்கள் யாவும் எரிந்து சாம்பலாய்விடுவானேன்? அரசன் மட்டும் எரியாமல்போன காரணமென்ன?

திரிசங்கு என்ற சூரியகுல மன்னன் சுவர்கத்திற்கு போகவெண்ணி வசிஸ்டரிடம் சென்று தன்னை சுவர்கத்திற்கு அனுப்பிவைக்கவேண்ட, வசிஸ்டர் நீசன், பாபி ஆகவே உன்னை சுவர்கத்திற்கு அனுப்ப என்னால் இயலாது என்று கூறிவிட மன்னன் மனம் நொந்து விஸ்வாமித்திரரிடம் சென்று தன் விருப்பத்தையும் வசிஸ்டர்மறுத்து கூறிவிட்டதையும் தெரிவிக்க விஸ்வாமித்திரர் மன்னா மனம் வருந்த வேண்டாம். யாகம் செய்து உன்னை பரிசுத்தனாக்கி நான் அனுப்புகிறேன் சுவர்கத்திற்கு என்று கூறி ஒரு யாகம் செய்து திரி சங்குவை பரிசுத்தனாக்கி புஷ்பவிமானத்திலேற்றி சுவர்கத்திற்கனுப்ப இதை கண்ட இந்திரன் ஒரு நீசன் இங்கு வருவதா? என்று தேவலோகத்திற்கு வரவிடாமல் கீழேபோ என்று விரட்ட விஸ்வாமித்திரர் தேவலோகம்போவென்றுகூற இருவருக்கும் மத்தியில் ஆகாயத்தில் புஷ்பவிமானத்துடன் திரிசங்கு தடுமாற உடனே விஸ்வாமித்திரர் திரிசங்கு தடுமாறிய அதேஇடத்தில்சுவர்கத்தைஏற்படுத்தி அதில் திரிசங்குவை இருக்க வைத்ததாகவும் கூறப்படுகிறது. அதே திரிசங்குவின் மகனான அரிச்சந்திரனிடம் ஒரு பொய்வார்த்தை வாங்குவதற்காக பலகொடுமைகளை அதே விஸ்வாமித்திரன் செய்ததாகவும் கூறப்படுகிறது.

அரிச்சந்திரன் காலத்திற்குப் பின் சூரியகுலம்நசித்துவிட்டதாகவும் அரிச்சந்திரனுக்கு பின் இருபத்தோராவது தலைமுறையில் அதே வம்சத்தில் தசரதன் மகனாக ராமன் அவதரித்து அவனால் சூரியகுலம் மீண்டும் மேன்மையடைந்ததாக கூறப்படுகிறது. ராமன் பால்ய வயதாயிருக்கும்போது ராமனையும், இலக்குமணனையும் அழைத்துச் சென்று செய்யும் யாகத்தை கெடுக்க வந்த தாடகையைக் கொன்று சுபாகுவையும் கொன்று மாரீசனைக் கடலிலே தம்யாகத்தை விஸ்வாமித்திரர் நிறைவேற்றிக்கொண்டதாகவும் கூறப்படுகிறது. திரிசங்குவை சுவர்கத்திற்கனுப்பிய விஸ்வாமித்திரர் திரிசங்குவின் மகனான அரிச்சந்திரனிடம் ஒரு பொய் வார்த்தைவாங்க பல கொடுமைகளைச் செய்ததும் அதே விஸ்வாமித்திரர் அதன்பின் அதே வம்சத்தில் இருபத்தோராவது தலைமுறையில் உதித்த ராமன் காலத்திலும் இருந்ததாகக் கூறப்படுகிறது. தசரதனுக்கு பல மனைவிகளிருந்தும் பதினாயிரம் ஆண்டுகள் புத்திர பாக்கியமின்றி பின் புத்திரகாமேட்டி யாகம் செய்து அதன்பயனாய் ராமன் அவதரித்ததாகவும் கூறப்படுகிறது. தசரதன் பதினாயிரம் ஆண்டுகள் உயிர்வாழ்ந்தது உண்மையா? அப்படியும் ஒரு மனிதன் உயிர்வாழமுடியுமா? ஒரு மனிதனின் ஆயுள் 125 ஆண்டுகள் என்று பேரறிஞரும் ஆராய்ச்சியாளரும் கூறுகின்றனர். இதன்படி கணக்கிட்டுப் பார்த்தாலே இருபத்தோரு தலைமுறைக்கு 2025 ஆண்டுகள் ஆகிறது. இவ்வளவு ஆண்டுகள் உயிர்வாழ்ந்தாரா விஸ்வாமித்திரர்? அப்படிக்கின்றி தசரதன் பதினாயிரம் ஆண்டுகள் உயிர் வாழ்ந்ததை ஒப்புக்கொண்டு ஒருதலைமுறைக்கு 5000 ஆண்டுகள் வீதம் இருபத்தோரு தலைமுறைக்கு 105000 ஆண்டுகளாகிறது. ஒரு லட்சத்துக்கு ஐயாயிரம் ஆண்டுகள் விஸ்வாமித்திரர் உயிர் வாழ்ந்தாரா? இப்படி உயிர் வாழ்ந்தது உண்மையானால் விஸ்வாமித்திரர் இப்பொழுது இருக்கிறாரா? இறந்துவிட்டாரா?

அடுத்தபடியாக இதோ நமது மூன்றாவது கேள்வி

நாம் ஒரு கடைத்தெரு வழியாகப் போய்க்கொண்டிருக்கிறோம். ஐயா, இரண்டு கண்ணுமில்லாத குருடன் இரண்டு கைகால்களுமில்லாத முடவனாகிய ஏழைக்கிறங்கி ஒரு மூன்று காசு தருமம் கொடுங்களய்யா என்று ஒரு குருடனோ, முடவனோ கேட்கிறான். நாம் ஒரு காலணாவை அவனிடம் கொடுத்துவிட்டு அருகிலுள்ளஒருவரை பார்த்து ஏனய்யாஇவனுக்குப் பாதியிலே கண்போய்விட்டதா அல்லது பிறந்த பிறவியா? ஒருவேலையும் செய்ய முடியாது பாபம் என்று. அதற்கு அவர் போமய்யா போம். இவன் முன் சென்மத்தில் செய்த கர்மவினையை இந்த சென்மத்தில் அனுபவிக்கிறான். இவன் மகாபாவி ஐயா இவனைப் பார்த்து நீர் பாபம் என்று பச்சாதாபப்படுகிறீரே என்று. முன் சென்மத்தில் செய்த வினையை மறுசென்மத்தில் அனுபவிப்பதாக. இன்னும் சற்று அப்பால் சென்றவுடன் அடபாபி இந்த கொடும் வெய்யிலில் பசுமாட்டை போட்டு ஏண்டா இப்படிக் கொல்றே. பாபமடா! வாயில்லாத சீவனை அடிக்காதே பாபம் இதற்கெல்லாம் எமனுலகில் தக்கதண்டனை உனக்கு கிடைக்கும் என்று வழிப்போக்கன் வண்டிக்காரனைப்பார்த்து இப்படிக்கூறுகிறான்

ஒரு மனிதன் தான் முன்சென்மத்தில் செய்த வஞ்சனை சூழ்ச்சி கொலை பாதகம் முதலியவற்றிற்கு அவன் இறந்தவுடன் எமனுலகில் விசாரித்து தக்க தண்டனையும் பெற்று அனுபவித்துவிட்டால் மீண்டும் அவன் மனிதனாகப் பிறந்தால் எல்லோரையும் போல் அவனும் அங்கஹீன மற்றவனாகத்தானே பிறக்கவேண்டும். அப்படிக்கின்றி ஏன் கூன், குருடு, முடவனாகப் பிறக்கவேண்டும்.

அப்படிக்கின்றி ஒரு மனிதன் முன்சென்மத்தில் செய்த வினையை மறுசென்மத்தில்தான் அனுபவிக்கிறான் என்றால் ஒரு மனிதன் யிறந்தவுடன் எமனுலகில் தண்டனை யளிப்பதோ அதை அனுபவிப்பதோ யாவும் சுத்தபொய். ஆகவே யிவையிரண்டில் எது பொய்? எது உண்மை? இந்தக்கேள்விகளுக்குச்சரியான பதிலை எதிர் பார்க்கும் தோழன் எஸ். என். விவேகன் கரூர்.

வாழ்க நம் வளமார் திராவிடம்!

வளர்க பகுத்தறிவு!!

ஒழிக மடமை!!

திருவாங்கூர் வாழ் தமிழர்களின் உரிமைப் போர் துவக்கம்

திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசு தலைவர் திரு. நத்தேனியல் அவர்களும் பட்டம் தாணுபிள்ளையும் வட நாடு சென்று வடநாட்டுத் தலைவர்களுடன் கொச்சி, திருவாங்கூர் இணைப்புபற்றி விவாதித்தும், திரு நத்தேனியல் அவர்கள் திருவாங்கூர்தமிழ்ப்பகுதிகள் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட வேண்டியதின் அவசியத்தை பலவாறாக எடுத்து விளக்கியும் இரும்புத் தலைகள் அசையாததால் போராட்ட நாள் குறிப்பிட்டிருந்தபடி சென்ற 13.4.49ல் போர்முரசு கொட்டினர். இதன் விளைவாக தலைவர் நத்தேனியல் ஆர். கே. ராம், காந்திராமன் பி. என். மணி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசு உறுப்பினர்கள் திருவாங்கூர் தபால் தலைகளை தீயிட்டும் தங்கள் வெறுப்பைக் காட்டி யுள்ளார்கள். இன்னும் சிலர் எந்த வரிகொடா இயக்கத்தின் மூலம் பர்டோலி வீரர் என்ற பட்டம் பெற்றாரோ பட்டேல் அதே பட்டேலின் பிடிவாதப் போக்கினால்விளைந்த இந்தபோராட்டத்தையும் வரிகொடா இயக்கமாக நடத்த யோசனை கூறுகிறார்கள்.

நா. அ.

கீழ்கண்ட ஊர்களில் "உடுமலை பீரங்கி" கிடைக்குமிடம்

மதுரை.
என். எம். என். மஹம்மது ஹனிபா
தெற்குவெளி வீதி

பெங்களூர்.
நிர்வாகி, கிரிசன் அறிவுமனை
நாராயணசாமி பிள்ளை தெரு

சிதம்பரம்.
எம். கே. சுந்தரம்

கோயம்புத்தூர்.
எஸ். மீனாட்சிசுந்தரம்
ஆர், எஸ். புரம்

ஈரோடு
எம். மீனாட்சிசுந்தரம்
120, கச்சேரி வீதி

டெலிபோன் : 86729.

நியூடன் அண்டு கம்பெனி,
80, வாலாஜா ரோடு, மௌண்ட் ரோடு,
சென்னை 2.

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகலவித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும், ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

Edited and Published by B. Ranganadhan, 33. Thiruvengada Mudali Street, Periamet, Madras. 3, Mg. Editor R. Rajagopal; Printed by Ch. Adinarayana at the Andhra Printing House,4, S ubramania Mudali Street; Purasawalkam, Madras. 7.